**சுருக்கம்**

நீர்வளத்துறை – ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட காவிரி கழிமுகப் பகுதியில் வெண்ணாறு உபவடிநிலத்தில் பருவநிலை மாறுதலை தழுவல் திட்டம்–I–ன் கீழ் திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் திட்டப்பகுதியில் குடியிருந்தோருக்காக கட்டப்பட்ட மீள்குடியேற்ற குடியிருப்புகளில் ஒதுக்கீடு செய்யப்படாமல் காலியாக உள்ள 21 குடியிருப்புகளை திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர்களிடம் ஒப்படைத்தல்– இசைவளித்தல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நீர்வளத் (நீவ1) துறை**

**அரசாணை (டி) எண்.245** **நாள். 24.12.2024**

குரோதி, மார்கழி 9

திருவள்ளுவர் ஆண்டு 2055

**படிக்கப்பட்டவை :**

1. அரசாணை (நிலை) எண்.36, பொதுப்பணி (நீவ2) துறை, நாள் 29.1.2016.
2. திட்ட இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை, திருச்சி மண்டலம், திருச்சி–20. கடித எண். 4[அரசு]/கோ.10/2024/திருச்சி, நாள். 21.11.2024.

---

**ஆணை :**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவிடன் காவிரி கழிமுகப் பகுதியில் வெண்ணாறு உபவடிநிலத்தில் பருவநிலை மாறுதலை தழுவல் திட்டம்–I–ஐ ரூபாய்.960.66 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், இத்திட்டத்தின் மீள் குடியேற்றப் பணிகள் தொடர்பாக, திட்ட இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை, திருச்சி மண்டலம் அவர்கள் தெரிவித்துள்ள விவரங்கள் பின்வருமாறு :–

(i) திட்டப் பணிகளுக்குட்பட்ட ஆற்றங்கரை புறம்போக்கில் குடியிருந்தவர்களின் மீள் குடியேற்றத்திற்காக திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் முறையே 27 மற்றும் 9 ஆக மொத்தம் 36 தகுதியுள்ள புறம்போக்கு இடங்கள் தெரிவுச் செய்யப்பட்டு, தொடர்புடைய மாவட்ட ஆட்சியரின் முன் அனுமதியுடன் குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு, பயனாளர்களின் விருப்பத்தின் அடிப்படையில் குடியிருப்பு வீடு ஒதுக்கீடு அல்லது அதற்கு ஈடான தொகை வழங்கப்பட்டு மீள்குடியேற்ற பணிகள் நிறைவேற்றப்பட்டன.

(ii) இத்திட்டத்தில் கட்டப்பட்ட மீள்குடியேற்ற குடியிருப்பு வீடுகளின் விபரம் :

| | | |
|---|---|---|
| 1. | திருவாரூர் மாவட்டம் | 719 |
| 2. | நாகப்பட்டினம் மாவட்டம் | 369 |
| 3. | மொத்தம் | 1088 |
| 4. | பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகள் | 1067 |
| 5. | ஒதுக்கீடு செய்யப்படாமல் காலியாக உள்ள வீடுகளின் எண்ணிக்கை | 21 |

(iii) திருவாரூர் மாவட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படாமல் காலியாக உள்ள வீடுகளின் விபரம் :

| வ. எண். | வட்டம் | மீள்குடியேற்றம் தளத்தின் பெயர் | புல எண். | காலியாக உள்ள வீடுகளின் எண். | மொத்தம் காலியாக உள்ள வீடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | திருத்துறைப் பூண்டி | கொருக்கை | 487/ 21A | 31 | 01 |
| 2. | திருவாரூர் | பின்னவாசல் – மாவூர் | 135 | 18, 47 | 02 |
| | | | | மொத்தம் | 03 |

(iv) நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படாமல் காலியாக உள்ள வீடுகளின் விபரம் :

| வ. எண். | வட்டம் | மறு–குடியமர்வு தளத்தின் பெயர் | புல எண் | காலியாக உள்ள வீடுகளின் எண் | மொத்த காலியாக உள்ள வீடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | கீழ்வேளூர் | அகரம் வடக்கு பனையூர் | 16/10 & 16/11 | 17,28 | 02 |
| 2. | வேதாரண்யம் | துளசப்புரம் | 155/22 | 3 | 01 |
| 3. | | காடந்தேத்தி | 110 | 17,23,29, 35,36,43, 51,95, 115,129, 136,144, 153,186 | 14 |
| 4. | | உம்பளச்சேரி | 72/1A | 17 | 01 |
| | | | | மொத்தம் | 18 |

(v) மேற்படி வீடு ஒதுக்கீட்டு பணிகளின் போது வீடு ஒதுக்கீட்டிற்கு முன்பாகவே உடன் வசிப்பவர்கள் யாரும் இல்லாத நிலையில் பயனாளிகள் இறந்துவிட்டதாலும், சில பயனாளிகள் வீடுகளுக்கு பதிலாக ஈடு செய்யும் தொகை பெற்று கொண்டுவிட்டதாலும் 21 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படாமல் காலியாக வைக்கப்பட்டுள்ளன.

(vi) இத்திட்டத்தின் இரண்டாம் கட்ட திட்டப் பணிகளுக்கு ஒப்புதல் பெறுவதற்கான நடவடிக்கைகள் இன்னும் முடிவடையாமல் உள்ளதால் இவ்வீடுகளை இரண்டாம் கட்ட திட்டத்திற்கு பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது.

(vii) எனவே, மேற்படி 21 வீடுகளையும் திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர்கள் வசம் ஒப்படைக்கும் பட்சத்தில் அரசின் ஏதேனும் ஒரு திட்டத்தின் கீழ் வீடற்ற மற்றும் வறுமை நிலையில் வாழும் தகுதியுள்ள பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்கான வாய்ப்புகள் உருவாகுவதுடன், குடியிருப்பு வீடுகள் தேவையற்ற வகையில் சேதமடையாமல் பாதுகாப்புடன் பயனாளிகளால் பராமரிக்கப்படுவதற்கான நிலை ஏற்படும்.

3. எனவே, ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட காவிரி கழிமுகப் பகுதியில் வெண்ணாறு உபவடிநிலத்தில் பருவநிலை மாறுதலை தழுவல் திட்டம்–I–ன் கீழ்

திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் திட்டப்பகுதியில் குடியிருந்தோருக்காக கட்டப்பட்ட மீள்குடியேற்ற குடியிருப்புகளில் ஒதுக்கீடு செய்யப்படாமல் காலியாக உள்ள 21 குடியிருப்புகளை திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர்களிடம் ஒப்படைப்பது தொடர்பாக அரசின் உரிய அறிவுரைகளை வழங்குமாறு திட்ட இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை, திருச்சி மண்டலம் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. திட்ட இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை, திருச்சி மண்டலம் அவர்களின் செயற்குறிப்பினை நன்கு பரிசீலனை செய்து அதனை ஏற்று ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட காவிரி கழிமுகப் பகுதியில் வெண்ணாறு உபவடிநிலத்தில் பருவநிலை மாறுதலை தழுவல் திட்டம்–I–ன் கீழ் திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் திட்டப்பகுதியில் குடியிருந்தோருக்காக கட்டப்பட்ட மீள்குடியேற்ற குடியிருப்புகளில் ஒதுக்கீடு செய்யப்படாமல் காலியாக உள்ள 21 குடியிருப்புகளை திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர்களிடம் ஒப்படைப்பதற்கு இசைவு அளித்து அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. மணிவாசன்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்
முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும்
தலைமைப் பொறியாளர்(பொது),
நீர்வளத்துறை, சென்னை–5.
தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை,
திருச்சி மண்டலம், திருச்சி–20.
மாவட்ட ஆட்சியர், திருவாரூர்/ நாகப்பட்டினம்.
மாவட்ட கருவூல அலுவலர், திருவாரூர்/ நாகப்பட்டினம்.
முதன்மை கணக்காயர் (தணிக்கை / கணக்கு மற்றும் பணிவரவுகள்),
சென்னை–18.
**நகல் :**
உள்ளுறை தணிக்கை அலுவலர்,
முதன்மை கணக்காயர் (பொது மற்றும் சமூகத்துறை தணிக்கை)
அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.
இருப்பு கோப்பு/ உதிரி நகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

24/12/24
**பிரிவு அலுவலர்**
24.12.2024